1970 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : எத்தனே விதமான வாழைகள் இருக்கின்றன என்பதற்கு அவற்றின் பெயர்ப் பட்டியல் இல்லே. புதியதாக ஒரு பயிர் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றுக்குப் பெயர் வைக்கப்படும். அதைத் தவருக இந்த அரசாங்கம் நினேக்கவில்லே. மேலும் மத்திய அரசாங்கம் தான் இது போல விதைகளுக்குப் பெயர் வைத்து முன்னேடியாக இருந்திருக்கிறது. அதன் காரணத்தினுல் எல்லோராலும் பெருமையாக ஏற்று கொள்ளப்படுகிற பெயர்களே வைக்கப்படுகின்றன. வட ஆற்காடு, செங்கல்பட்டு, கோயமுத்தூர் போன்ற மாவட்டங்களில் பச்சை வாழை பயிரிடப்பட்டு வருகிறது. போதிய உதவிகளும் அளிக்கப்படுகின்றன.

மாணவியர் விடுதிகள்.

* 147 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள "அரசு மாணவியர் விடுதிக்குப் புது கட்டடம்" கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனேயில் உள்ளதா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : இல்லே.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலேவர் அவர்களே, திருப்பூரில் தற்போது இருக்கிற மாணவியர் விடுதிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 400 வீதம் வருடம் சுமார் 5 ஆயிரம் ரூபாய் வாடகை செலவாகிறது. அதற்கு சொந்தமான இடம் அங்கே இருக்கிற காரணத்தினுல் விடுதிக்கே சொந்தமான கட்டடத்தைக் கட்ட அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விடுதிகளுக்கு சொந்தமான கட்டடம் கட்டும் திட்டம் ஃபேஸ்டு ப்ரொக்கிராமாக நடத்தப்பட்டு வருகிறது. இவற்றுக்கான செயற்குறிப்புகளே மாவட்ட நல அதிகாரிகள் அரசாங்கத்திற்கு அவ்வப்போது அனுப்பி வருகிருர்கள். திருப்பூர் நகர விடுதி சம்பந்தமாக செயற்குறிப்பு எதுவும் வந்ததாகத் தெரியவில்லே. ஆகவே, இந்த ஆண்டு அது எடுத்துக்கொள்ளப்படவில்லே. அப்படிப்பட்ட செயற்குறிப்பு வந்தால் நிச்சயமாக அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும்.

* 148 வினு.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆற்காடு ஜில்லா, காட்டுமன்னுர்கோயில் அரசாங்க அரிசன பெண்கள் ஹாஸ்டல் இருக்கும் இடம் அரசாங்கத்திற்கு சொந்தமானதா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : இல்லே.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : அரசாங்கம் ஓரிடத்தை எடுத்துக்கொள்ள உரிமை உண்டு. எடுத்துக்கொண்ட ஒரு இடத்தைத் திரும்பவும் மற்றெருவருக்கு ஜாரி செய்யவும் உரிமை உண்டு. ஆயினும், ஹரிஜனப் பெண்கள் ஹாஸ்டல் இருக்கும் இடத்தைத்